
25.புரட்டாதி. 2021 பக்கங்கள் - 04




# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 21

## கஜேந்திரனின் கைதுக்கு சரவணபவன் கண்டனம்



அகிம்சை வழியில் போராடி உயிர்நீத் தவருக்கு, அகிம்சை வழியில் அஞ்சலி செலுத்த முயன்றவர்கள் மீது பொலிஸார் அதிகார பலத்தைப் பிரயோகித் துள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ் தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.


நல்லூரில் தியாகி திலீபனை அஞ்சலிக்க முயன்ற நாடா ளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (03)

## உயர் தர வகுப்பில் பிரவேசிப்பதற்கு ஆகக்குறைந்த தகுதிகளை உள்ளடக்கிய விசேட சுற்றறிக்கை

2020 கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் அழகியல் பாடநெறி பரீட்சைக்காக தோற்றிய மாணவர்கள் உயர் தர வகுப்பில் உள்வாங்குவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகுதிகளை உள்ளடக்கிய விசேட சுற்றறிக்கையை வெளியிட கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (03)

## 25 நாள் வேலையை வலியுறுத்தி போராட்டம்

வேலை நாட்களை அதிகரிக்கக் கோரி கொட்டும் மழையில் தனி நபராக தொழிலாளி ஒருவர் ஆர்பாட்டத்தில் ஈடுட்டுள்ளார். பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கிழ் இயங்கும் பொகவந்தலாவ கெம்பியன் 57ஆம் பிரிவை சேர்ந்த நாகூர் பிச்சை என்ற தொழிலாளியே கெம்பியன் நகர் விநாயகர் ஆலயத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். (03)



## நான்கு கட்டங்களாக பாடசாலைகளை திறக்க எதிர்பார்ப்பு

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்காக கொவிட் தடுப்பு ஜனாதிபதி செயலணி, சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் இணைந்து தொழிநுட்ப குழு ஒன்றை ஸ்தாபித்துள்ள நிலையில் இந்த குழுவினால் எடுக்கப்படும் தீர்மானத்துக்கமைய, பாடசாலைகள் மீள திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)



## ஜேர்மனிய பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2021



Armin Laschet

அர்மின் லஸ்செந்



Olaf Scholz

ஒல்வ் சொல்ஸ்

யேர்மனிய பாராளுமன்றத்தை Bundestag என்று அழைப்பார்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது அந்த நாட்டின் அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது.

அதன்படி பாராளுமன்றத் தேர்தல் நாளை ஞாயிற்றுக் கிழமை 26.09.2021ம் திகதி யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களிலும் நடைபெறுகின்றது. இத்தேர்த லானது 20வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலாகும். (03)

## இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக மஹேல நியமனம்



இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் ஆலோசகராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்தன நியமிக் கப்பட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இதனை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஐசிசி ஆடவர் ரி20 உலகக்கிண்ண தொடரின் முதல் சுற்றுக்காக இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக அவர் செயற்படவுள்ளதாக இலங்கை கிரிக் கெட் தெரிவித்துள்ளது.

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## ஒற்றுமையில்லையேல் எதுவும் சாத்தியமில்லை

இலங்கையில்தமிழினம்தலைநிமிர்ந்து வாழவேண்டுமாகவிருந்தால். ஆளுக்கொரு அரசியற் கட்சியை மாத்திரம் வைத்திருந்தால் போதாது. இருக்கக்கூடிய தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். இதனை உணர்ந்துதான் விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற குடையின் கீழ் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து பாராளுமன்றில் 22 ஆசனங்களுடன் தமிழினம் தலைநிமிர்ந்து நின்றது. ஆனால் இன்று யுத்தம் நிறைவடைந்து விடுதலைப்புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்னர். ஒன்றாகவிருந்த கட்சிகள் பிளவுபட்டு கருத்துமோதல்களால் ஒருவரையொருவர் விமர்சித்துக்கொண்டு எமது இருப்பைக் கேள்விக்குறியாக்கும் அரசியலைச் செய்வதையே இன்று நாம் காண்கிறோம்.

பெயரளவில். ஆவணங்களில் கையொப்பமிடுவதால் ஒற்றுமை வந்துவிடாது. அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் ஒன்றிணையுங்கள் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காக. இனியும் இந்த நாட்டில் தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமெனில் தமிழ்க் கட்சிகளது ஒற்றுமை அவசியம். இல்லையேல் இந்த நாட்டில் எம்மால் எதனையும் செய்ய முடியாது. எதற்கும் திராணியற்றவர்களாக அடிமைகளாக தொடர்ந்தும் வாழவேண்டிய நிர்ப்பந்தமே எமக்கு ஏற்படும்.

செய்த தவறுகளில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் சரியான பாதையில் பயணிக்கவேண்டுமே தவிர. மீண்டும் மீண்டும் செய்த பழைய தவறையே செய்துவந்தால் என்ன பயன். பழைய கதைகளையே இன்றும் தூக்கிப் பிடித்துக்கொண்டு கேவலமான அரசியல் செய்வது தமிழினத்தின் அழிவுக்கே வழிவகுக்கும். இன்று தமிழினம் முன்பு இருந்ததைவிட மிக மோசமான அடக்குமுறைகளை எதிர்கொள்கிறது. வாய்திறந்து கூட கதைக்க முடியாத அளவிற்கு நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளது. சர்வதேசத்திடம் ஒன்றும் உள்நாட்டில் இன்னொன்றுமாக அரசு செயற்படுகிறது. மனித உரிமை மீறல்கள் அரச தரப்பினரால் இன்றும் நடைபெறாமலில்லை. அச்சுறுத்தல்கள் தொடராமலில்லை.

ஆகவே அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாகிய நீங்கள் என்ன செய்யவேண்டும் என்கிற மாற்றுத்திட்டம் உங்களிடம் இருக்கிறதா?. யுத்தம் நிறைவடைந்து பத்தாண்டுகளைக் கடந்துவிட்டபோதிலும். இன்னும் ஒரு கட்டுக் கோப்புக்குள் வராமல் உங்களுக்குள் விரிசல் தான் அதிகரித்திருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் எப்போது உணர்ந்து ஒன்றுபடப்போகிறீர்கள்.

## இன்றும் மழை பெய்ய வாய்ப்பு - மக்களே அவதானம்

நாட்டின் தென்மேற்கு பகுதியில் மழையுடனான வானிலையில் அடுத்த சில நாட்களில் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30–40 கிலோ மீற்றர் வரை காணப்படும். புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50–60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



**நாட்டில் மேலும் 82 கொவிட் மரணங்கள் நேற்று (24.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,530 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1332 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 511,372 ஆக அதிகரித்துள்ளது.**

## 2020 O/L மாணவர்களுக்கான அறிவிப்பு

கடந்த (23) அன்று வெளியிடப்பட்ட 2020 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு குறிக்கப்பட்ட சான்றிதழை எதிர்வரும் திங்கட்கிழை முதல் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனை தெரிவித்தார்.

வெளியிடப்ட்ட 2020ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் பெறவேண்டி இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி. 011 2 784 208. 011 2 784 537. 011 3 140 314 அல்லது 1911 என்ற ஹொட்லைன் இலக்கத்தின் ஊடாக அழைப்பதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்

இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு. 4.513 பரீட்சை நிலையங்களில். 622.352 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk ஆகிய உத்தியோகபூர்வ இணையத்தளங்களின் ஊடாக பரீட்சார்த்திகளின் சரியான பரீட்சை எண்ணை உள்ளிட்டு பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும்.


அழகியல் பாடநெறிக்கான செயன்முறைப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படாவிட்டாலும். பாடசாலை மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளில் உயர் தரம் கற்பதற்காக 75.1 சதவீத மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 231.458 .

இந்த மாணவர்கள் உயர் தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர். மொத்த பரீட்சார்திகளுள் 236.053 பேர் அதாவது 73.6 சதவீதமானோர் உயர் தரத்திற்கு தகுதிபெற்றுள்ளனர். அழகியல் பாடநெறிகளுக்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர். இவற்றில் சிறுசிறு மாற்றங்களே ஏற்படக்கூடும்.

நாட்டில் நிலவுகின்ற கொவிட் தொற்று சூழ்நிலை காரணமாக. இந்த ஆண்டு. அழகியல் பாடங்களில் செயல்முறைப் பரீட்சைகள் நடத்தப்படவில்லை. அந்தப் பாடத்தின் பெறுபேறுகளை தவிர ஏனைய பாடங்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர். அழகியல் பாடங்களின் நடைமுறைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு. அந்த மாணவர்களுக்கு மட்டும் மீண்டும் பெறுபேறுகள் வழங்கப்பட உள்ளன.

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளின் பெறுபேறுகளும் சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித மேலும் தெரிவித்தார்.



## ஜேர்மனிய பாராளுமன்ற பொதுத்தேர்தல் – 2021

### Bundestag Wahl (German Federal Election)

யேர்மனிய நாட்டுத் தேர்தல் முறையில் அரசியல் கட்சிக்கும் கான்சிலராகத் தெரிவுசெய்யப்படுபவருக்கும் மக்கள் வாக்களிப்பார்கள். இறுதியில் எந்தக் கட்சி கூடுதலான வாக்குகள் பெற்றுக்கொள்கிறதோ. அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நாட்டின் Bundeskanzler கான்சிலராகத் (Chancellor) தெரிவு செய்யப்படுவார். இவர்தான் நாட்டின் அதிகாரம் மிக்க பதவியில் இருப்பார். யேர்மனியைப் பொறுத்தளவில் கடந்த 15 ஆண்டுகளாக அங்கல மேக்கல் (Angela Merkel) என்ற பெண்மணியே ஆட்சியைத் திறப்பட நடாத்தி வந்தார். இவர் CDU கட்சியின் தலைவராகவும் கான்சிலராகவும் (Bundeskanzler) இருந்து ஓய்வு பெறுவதால் இத்தேர்தலில் போட் டியிடாமல் இன்னொருவர் போட்டியிட விட்டுக்கொடுத்துள்ளார். யேர்மனிய அரசியல் வரலாற்றில் CDU கட்சி அல்லது SPD கட்சி தான் கூடுதலாக ஆட்சியில் இருந்துள்ளன. பின்னர் இரண்டு மூன்று கட்சிகளும் கூட்டணி அமைத்து ஆட்சியை பிடித்தன. ஆனால் கடந்த இரண்டு தேர்தல்களிலும் பிரதான கட்சிகளான CDU ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் SPD ஒன்று சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடித்திருந்தன.

நாட்டில் அண்மையில் நடைபெற்ற சில மாநிலங்களின் தேர்தல்களின் முடிவுகள். மற்றும் வெளிநாட்டு அகதிகள் வரவு. கொரோனா நெருக்கடி. வேலைவாய்ப்பு. பொருளாதார நெருக்கடிகள். சுற்றுச்சூழல். நாட்டின் பாதுகாப்பு. வெளிநாட்டுக் கொள்கை. அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு போன்ற பல நெருக்கடிகளால் மக்கள் விரக்தியில் இருப்பதாகத் தெரியவருகின்றது. இதனால் எந்தக் கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. ஆதலால் மீண்டும் கூட்டரசாங்கம் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே எந்தக் கட்சி வெற்றி பெற்று யார்? நாட்டின் கான்சிலராக வருவார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

கட்சிகளின் தலைவர்களான அர்மின் லஸ்செற் அல்லது ஒல்வ் சொல்ஸ் (Armin Laschet, Olaf Scholz) இவர்களில் ஒருவர்தான் கான்சிலராக வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தற்போதய அரசியல் சூழலில் யார்? வெற்றி பெறுவார் என்று கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது. போட்டியிடும் கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் கான்சிலர் பதவிக்கான முதன்மை வேட்பாளர்களின் விபரங்களைப் பார்ப்போம். (ஆங்கிலத்திலும் யேர்மனி மொழியான டொச்சிலும் காணலாம்)

01.Armin Laschet - CDU - Christian Democratic Union of Germany
(Christlich Demokratische Union Deutschlands)
02.Markus Söder - CSU - Christian Social Union in Bavaria (CSU).
(Christlich-Soziale Union in Bayern)
03.Olaf Scholz - SPD - Social Democratic Party of Germany
( Sozialdemokratische Partei Deutschlands)
04.Alice Weidel & - AfD - Alternative for Germany
Tino Chrupalla (Alternative für Deutschland)
05.Christian Lindner - FDP - Free Democratic Party
(Freie Demokratische Partei)
06.Janine Wissler & - Left - The Left
Dietmar Bartsch (Die Linke)
07.Annalena Baerbock - Green - Alliance 90/The Greens
(Bündnis 90/Die Grünen)

1-CDU - கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி
2-CSU - கிறிஸ்தவ சமூக முன்னணி பவேரியா (பயான்)
3-SPD - சோஷலிச ஜனநாயகக் கட்சி
4-A&D - மாற்றத்திற்கான ஜேர்மனிய கட்சி
5-FDP - சுதந்திர ஜனநாயகக் கட்சி
6-Die Linke - இடதுசாரிக்கட்சி
7-Grünen - பசுமைக்கட்சி

தேர்தலில் முப்பதுக்கும் மேற்பட்ட சிறிய-பெரிய அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இவற்றில் முக்கியமான இந்த ஏழு கட்சிகளுமே அதிகப்படியான வாக்குகளைப் பெறுவது வழக்கமாகும். இதில் ஒரு கட்சி அல்லது கூட்டாகப் பல கட்சிகள் சேர்ந்து அரசை அமைக்கும். யேர்மனிய அரசியல் வரலாற்றில் இதுவரை எட்டு (8) கான்சிலர்கள் பதவி வகித்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு பெண்மணிதான் அஞ்சலா மேர்கல் மட்டும் பெண் கான்சிலராவர் (Angela Merkel). அடுத்து வருபவர் யார் என்பதை 26.9.2021 வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

**யேர்மனியில் முன்னாள் கான்சிலர்களின் விபரம்**

1-Konrad Adenauer (1949–1963)
2-Ludwig Erhard (1963–1966)
3-Kurt Georg Kiesinger (1966–1969)
4-Willy Brandt (1969–1974)
5-Helmut Schmidt (1974–1982)
6-Helmut Kohl (1982–1998)
7-Gerhard Schröder (1998–2005)
8-Angela Merkel (2005 - 2021)

**வைரமுத்து சிவராசா - "மணி" சஞ்சிகை ஆசிரியர்.
யேர்மனி.**

**சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நேர்காணல்...**

**(அடுத்த இதழில் வெளியாகும்)**

## நான்கு கட்டங்களாக...

*12 வயதுக்கு குறைந்தவர்களுக்கு தடுப்பூசி வழங்க அனுமதி வழங்கப்படவில்லை என்பதனால், கொவிட் பரவல் குறைவடைந்த பின்னர் தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புக்களை கொண்ட 3,884 பாடசாலைகளை முதல் கட்டமாக ஆரம்பிக்க உள்ளதாகவும், அதேபோல், தற்போது 12 – 19 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு இரு வேறு கட்டமாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.*

*இதனையடுத்து மாவட்ட, பிரதேச மட்டத்தில் பாடசாலைகளை ஆரம்பிக்கக்கூடிய சாதகமான நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க உள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.*

*இதன் பின்னர், கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை பெற்று தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டதன் பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

## 25 நாள் வேலை...

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர் எம்.கிருஸ்ணா)

*24.09 மதியம் 12 மணிமுதல் 01 மணிவரை கொட்டும் மழையில் பதாதை ஏந்தி ஆர்பாட்டத்தை முன்னெடுத்த அவர் தோட்ட தொழிலாளிகளின் நாள் சம்பளம் ஆயிரம் ரூபாய் என அறிவித்த பின்னர் தோட்ட நிர்வாகம் மாதத்தில் 12 அல்லது 14 நாட்களே வேலை வழங்குகிறது.*

*12 நாட்கள் வேலை செய்து எமது வாழ்க்கை செலவை கொண்டு நடத்த முடியாது. 25 நாட்கள் வேலை செய்தாலே எங்கள் குடும்பத்தை கொண்டு நடாத்த முடியும். ஜீவன் தொண்டமானையும், பழனி திகாம்பரம் இருவரையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பிய தோட்ட தொழிலாளிகளின் இந்த பிரச்சினைக்கு குரல் கொடுக்காதது ஏன்?*

*ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது வார்த்தையளவிலே உள்ளது. தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடி அதிகரித்துள்ளது. நாட்டின் ஜனாதிபதி தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடி தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என தொழிலாளர் சார்பாக கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.*

## உயர்தர வகுப்பில் பிரவேசிப்பதற்கு...

*நேற்று (24) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இது தொடர்பாக தெரிவிக்கையில், அழகியல் பாடநெறி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஏனைய பாடங்களில் இரண்டு திறமை சித்தி அடங்கலாக 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் திறன் ஆற்றல் படி நிலை 01தொடக்கம் 04 வரையிருக்குமாயின் அழகியல் பாடநெறி பரீட்சை பெறுபேறு வெளிவரும் வரையில் இந்த மாணவர்களுக்கு உயர் தர வகுப்பில் பிரவேசிக்க முடியும் என்றார்.*

*இதற்கமைவாக அழகியல் பாடநெறிக்கான பெறுபேறு வெளியிடுவதில் நிலவும் தாமதத்தின் காரணமாக மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா மேலும் கூறினார்.*

## கஜேந்திரனின் கைதுக்கு...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. தமிழ் மக்களுக்காக அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த தியாகி திலீபனுக்கு. அமைதியான முறையில் அஞ்சலி செலுத்த முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையைக் கேள்விக்குறியாக்கும் வகையில். அதிகார பலத்தைப் பிரயோகித்து. அவரைக் குண்டுக்கட்டாக தூக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். அஞ்சலிப்பதற்காக ஏற்றப்பட்ட சுடரை காலால் நசுக்கி அணைத்துள்ளனர். இவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் மக்களுக்கு நேசக் கரம் நீட்டுகிறார். ஆனால் நாட்டில் அரசும். அதன் ஏவலாளர்களும் தமிழ் மக்களை நசுக்கும் செயலிலேயே ஈடுபடுகின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கூட நாட்டில் மறுக்கப்படுகின்றது. அதன் ஒரு அங்கமே நாடாளுமன்ற உறுப்பினரின் கைது நடவடிக்கை.

குடாநாட்டில் வன்முறைகள். போதைப்பொருள் பாவனை தலைவிரித்தாடும் நிலையில். அவற்றையெல்லாம் கண்டும் காணாது இருக்கும் பொலிஸார். தமிழ் மக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ளும்போது பாய்ந்து விழுந்து அவற்றைத் தடுப் பதற்கு என்ன என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வது வழமையாகிவிட்டது. தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை தடுப்பதற்கு கொரோனா நிலைமையைக் கையில் எடுக்கும் பொலிஸார். மதுக்கடைகளில் கூட்டம் திரளும்போது பாதுகாப்புக்கு நிற்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைகளைத் தடுப்பதில் காட்டும் அக்கறையைப் பொலிஸார். வன்முறைகளைத் தடுப்பதிலும். சட்ட விரோத செயல்களைக் கட்டுப்படுத்துவதிலும் காட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**- சரவணபவன் ஊடகப்பிரிவு -**

## ஆபத்தின் விளிம்பில் ஆப்கான்




ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பிறகு அந்நாட்டில் சுகாதாரத் துறை சரிவின் விழிம்பில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் தலிபான்கள் ஆதிக்கத்தில் உள்ள நிலையில், அதன் தற்போதைய சுகாதாரத்துறை நிலை குறித்து பேசிய உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் **(Tedros Adhanom)**, ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர், சர்வதேச உதவிகள் நிறுத்தப்பட்டதால் அந்நாட்டு சுகாதார துறை சீர்குலையும் விளிம்பில் இருப்பதாகதெரிவித்தார். இந்தநிலையில் யார் உயிரை காப்பாற்றுவது? யார் உயிரை காப்பாற்றாமல் விடுவது? என்பதை முடிவெடுக்க முடியாமல் அந்நாட்டு சுகாதார துறை திணறி வருவதாக அவர் வேதனை தெரிவித்தார்.

அந்நாட்டுக்கு போதுமான உதவிகள் இல்லாததால் மிகப் பெரிய சுகாதார திட்டங்கள் கிடப்பில் இருப்பதாக அவர் கவலை வெளியிட்டார். அத்துடன், மருந்துகளை வாங்க முடியாமலும், ஊதியம் வழங்க முடியாமலும் சுகாதாரத் துறை ஸ்தம்பித்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த தடையால் பொது மக்களுக்கு கிடைக்கக் கூடிய அடிப்படை சுகாதார வசதிகள், அவசரகால உதவிகள், போலியோ ஒழிப்பு, கொரோனா தடுப்பூசி செலுத்தும் முயற்சிகள் போன்றவை ஆப்கானிஸ்தானில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் எச்சரித்துள்ளார்.

## நோபல் பரிசு விழாவுக்கு தொடரும் சோகம்



கொரோனா பரவலைத் தவிர்ப்பதற்காக இந்த ஆண்டும் நோபல் பரிசு வழங்கும் விழாக்கள் ரத்து செய்யப்படுவதாக அந்தப் பரிசுகளை வழங்கி வரும் அறக்கட்டளை அறிவித்துள்ளது. இதுகுறித்து ஸ்வீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமிலுள்ள நோபல் அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அடுத்த மாதம் 4 முதல் 11 ஆம் திகதி வரை அறிவிக்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே இந்த முறையும் ஸ்டொக்ஹோம் மற்றும் ஒஸ்லோ நகரங்களில் காணொலி மூலமும் மிக எளிமையான நிகழ்ச்சிகள் மூலமும் வரும் டிசம்பரில் நோபல் பரிசு வழங்கப்படும். நோபல் பரிசுகளை வென்றவர்கள் அவர்களது சொந்த நாட்டிலிருந்தபடியே அந்தப் பரிசுகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிநபர்கள் யானை வைத்திருக்க சென்னை ஐகோர்ட் தடை

சென்னை, தமிழகத்தில், யானைகளை தனிநபர்கள் வைத்திருக்கக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோவில் யானைகள் பராமரிப்பு தொடர்பான வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், தமிழகத்தில் எத்தனை யானைகள் உள்ளன. அதில், வளர்ப்பு யானைகள் மற்றும் வனத்துறை யானைகளின் எண்ணிக்கை குறித்த விபரங்களை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.



தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் ஆதிகேசவலு தலைமையிலான அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், கோவில்களின் கட்டுப்பாட்டில் 32 யானைகள், தனியார் கட்டுப்பாட்டில் 31 யானைகளும், வனத்துறை கட்டுப்பாட்டில் 67 யானைகளும் உள்ளன. அவற்றை வீடியோ பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது. இதனால், அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்று கொண்ட நீதிபதிகள், தமிழகத்தில் தனியார் யாரும் யானையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடாது என உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த மாதத்திற்கு ஒத்திவைத்தனர். மேலும், கடந்த 5 ஆண்டுகளில் வளர்ப்பு யானைகள், கோவில் யானைகள், வனத்துறை கட்டுப்பாட்டில் இருந்த யானைகள் குறித்த விபரத்தையும் தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.

## வெஸ்ட் இண்டீஸ் வீரர் ஷெர்பேன் ருதர்போர்ட் ஐபிஎல்லில் இருந்து வெளியேறினார்

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் இடம்பெற்றிருந்த வெஸ்ட் இண்டீஸ் வீரர் ஷெர்ஃபேன் ரூதர்ஃபோர்ட், அவரது தந்தை உயிரிழந்ததால் ஐபிஎல்லில் இருந்து வெளியேறியுள்ளார். ஐபிஎல் 14வது சீசனின் 2வது பாகம் ஐக்கிய அரபு அமீரகத்தில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஐபிஎல் முடிந்ததும் டி20 உலக கோப்பை நடக்கவிருப்பதால் இங்கிலாந்து வீரர்கள் பலரும் அதற்கு தயாராகும் விதமாக ஐபிஎல்லில் இருந்து விலகினர். ஆஸ்திரேலிய வீரர்கள் சிலரும் விலகினர்.

இதையடுத்து அப்படி வெளியேறிய வீரர்களுக்கு மாற்று வீரர்களை ஐபிஎல் அணிகள் அறிவித்தன. சன்ரைசர்ஸ் அணியில் ஜானி பேர்ஸ்டோ விலகிய நிலையில், அவருக்கு மாற்று வீரராக வெஸ்ட் இண்டீஸை சேர்ந்த ஆல்ரவுண்டர் ஷெர்ஃபேன் ரூதர்ஃபோர்டை ஒப்பந்தம் செய்தது சன்ரைசர்ஸ் அணி. டெல்லி கேபிடள்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ஆடும் லெவனில் ரூதர் ஃபோர்ட்க்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் அவர் சன்ரைசர்ஸ் அணியுடன் இருந்து வந்தார்.





இந்நிலையில், அவரது தந்தை உயிரிழந்துவிட்டார். இதையடுத்து உடனடியாக ஐபிஎல்லில் இருந்துவிலகி வெஸ்ட் இண்டீஸுக்கு சென்றுவிட்டார் ஷெர்ஃபேன் ரூதர்ஃபோர்ட்.

இதுதொடர்பாக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வெளியிட்டுள்ள பதிவில், ரூதர்ஃபோர்டின் தந்தை இறப்புக்கு சன்ரைசர்ஸ் அணி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும், இந்த நேரத்தில் ரூதர்ஃபோர்ட் அவரது குடும்பத்தினருடன் இருக்கவேண்டிய அவசியம் இருப்பதால், அவர் ஐபிஎல்லில் இருந்து வெளியேறுவதாகவும் தெரிவித்துள்ளது.

**- அப்துல் ஜெப்பார் அபதுல்லா -**

## ஒருவருடத்தில் கொரோனாவில் இருந்து உலகம் விடுபடும்



தடுப்பூசிகளின் உற்பத்தியை அதிகரித்து உலகம் முழுவதும் தடுப்பூசி விநியோகத்தை உறுதி செய்தால் ஒரு வருடத்தில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் முடிக்கு வந்து, உலகம் இயல்புக்குத் திரும்ப முடியும் என மொடர்னா மருந்தாக்கல் நிர்வாகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஸ்டீபன் போன்செல் **(Stephen Boncel)** தெரிவித்துள்ளார்.

சுவிஸ் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஸ்டீபன் போன்செல் இதனைக் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், தடுப்பூசி உற்பத்திகளை அதிகரித்தால் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் போதிய அளவு தடுப்பூசிகள் கிடைக்கும். இதன்மூலம் உலகில் உள்ள அனைவருக்கும் தடுப்பூசி போட முடியும். தேவையான அளவு பூஸ்டர் தடுப்பூசிகளையும் வழங்குவதை சாத்தியமாக்க வேண்டும் எனவும் கூறிய அவர், சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டார். தடுப்பூசி போடாதவர்கள் கூட தாமாகவே விரைவில் தடுப்பூசி போடுவார்கள். ஏனென்றால் டெல்டா திரிபு வைரஸ் வேகமாகத் தொற்றக்கூடியது.

எனவே தடுப்பூசியைப் போட்டுக்கொண்டால் சாதாரண காய்ச்சல் போன்ற விளைவுகளுடன் நெருக்கடியில் இருந்து வெளியேறலாம். மருத்துவமனை சேர்க்கைகளையும் தவிர்க்க முடியும் எனவும் மொடர்னா நிர்வாகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஸ்டீபன் போன்செல் கூறினார். இதன்போது அடுத்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் உலகம் இயல்பு நிலைக்கு திரும்புமா? என வினவியபோது, ஒரு வருடத்தில் இது சாத்தியமாகலாம் என நான் கருதுகிறேன் என அவர் கூறியுள்ளார்.

## ஜேம்ஸ்பாண்ட் நடிகர் டேனியல் கப்பற்படை தளபதியாக நியமனம்



லண்டன்: பிரபல ஜேம்ஸ்பாண்ட் நடிகர் டேனியல் கிராக், பிரிட்டன் கப்பற்படையின் கௌரவ ரோயல் நேவி கொமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜேம்ஸ் பாண்ட் படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் தற்போது முன்னணி ஜேம்ஸ் பாண்ட் நடிகரான டேனியல் கிராக் நடிப்பில் 'நோ டைம் டு டை' என்ற பெயரில் பிரமாண்ட படம் தயாராகியுள்ளது. செப்.30ல் வெளியாக உள்ளது.

இந்நிலையில் டேனியல் கிராக்கை கௌரவிக்கும் விதமாக பிரிட்டன் கப்பற்படை கௌரவ கொமாண்டராக நியமித்துள்ளது. இது தொடர்பாக டேனியல் கிராக் தனது டுவிட்டர் பக்கத்தில் கப்பற்படை சீருடை அணிந்துள்ள புகைப்படம் வெளியிட்டுள்ளார். அதில் இப்படி ஒரு கௌரவமிக்க பதவி எனக்கு கிடைத்ததில் நான் மிகவும் பெருமைபடுகிறேன் என பதிவிட்டுள்ளார்.